APPENDIX I.

[*Vide* Answer to Starred Question No. 362 on page 3 supra.]

(*a*) Yes. From the study of cholera situation in these two districts, it is observed that a number of major festivals attracting lakhs of people from all over the State was celebrated during the period from September to November 1963. Heavy traffic of people establishing direct communications between the affected areas and non-affected areas had also a direct bearing on the increased incidence. Further a large number of labour population migrated from adjacent districts to deltaic areas of these districts in search of work. Those people eat their cooked rice which they carry with them to the fields and drink any water available nearby during their sojourn. In certain areas of these districts, the feeding channels of the irrigation tanks are mainly responsible for the quick spread of infection as the water from the channels are largely used even though protected water wells form sources of drinking water supply. The above factors coupled with the adverse meteorological conditions and the consequent incessant heavy rains in the last week of November and first week of December 1963 were responsible for the increase of incidence of cholera in these districts.

(*b*) *The number of attacks and the number of deaths*—

	November 1963.		December 1963.		Total in 1963.	
	Attacks.	Deaths.	Attacks.	Deaths.	Attacks.	Deaths.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
Tiruchirappalli district.	412	170	421	218	1,795	790
Thanjavur district.	451	225	803	378	2,937	1,357

(*c*) *The details of the preventive steps taken*—

The District Health Officers concerned have taken necessary preventive and control measures such as—

(1) launching of mass anti-cholera inoculation campaign in the affected and surrounding areas;

(2) thorough and systematic disinfection of the infected premises, materials, clothing, etc.

(3) systematic and regular chlorination of all drinking water resources; and

(4) prompt removal of cases and their isolation in the nearest hospitals or infectious diseases sheds and their proper treatment under hospital conditions.

வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

[23rd March 1964

In addition to the staff appointed by the Panchayat Unions 51 Reserve Health Inspectors from the Epidemic Reserve were posted to these districts to augment the local resources. The District Health Officers and their Personal Assistants constantly visited the affected areas and supervised the preventive and control measures. Assistant Directors of Public Health inspected these two districts more than once and supervised the measures undertaken, and issued on the spot instruction to Public Health staff.

In view of the heavy incidence of cholera in Thanjavur district, one Health Officer from the Public Health Directorate was deputed to assist the District Health Officer in the control measures. Then another Health Officer (Regional Malariologist) and Personal Assistant to the District Health Officer, Madurai, and one selection Grade Health Inspector from Headquarters were also deputed to this district to assist the District Health Officer in his supervising work. The District has been divided into convenient cholera divisions and each cholera division has been placed in charge of a supervisory officer to facilitate effective supervision and prompt action wherever needed. One Epidemic Control Van, and two jeeps were stationed in this district for the quick movement of staff and equipment and transportation of cases for isolation and treatment. As many as 859,963 anti-cholera inoculations were done in Thanjavur district in the infected and surrounding villages. Cholera incidence in the district has shown signs of decline. Similarly in Tiruchirappalli district also a Selection Grade Health Inspector from the Public Health Directorate besides 14 Reserve Health Inspectors, were deputed to assist the District Health Officer and his Personal Assistant in their supervising work. Even in this district transport facilities were provided by requisitioning an epidemiological Unit Van of the Office of the Director of Public Health. As many as 381,922 anti-cholera inoculations were done in this district.

(அ) ஆம். இந்த இரண்டு மாவட்டங்களில் காலரா நிலைமை ஆராய்ந்ததிலிருந்து 1963 செப்டம்பரிலிருந்து நவம்பர்வரை கொண்டாடப்பட்ட பெரிய திருவிழாக்களுக்கு மாநிலத்தின் பல்வேறு பகுதிகளிலிருந்து லட்சக்கணக்கான மக்கள் வந்திருந்தனர் என்று தெரியவந்தது. காலராவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து பாதிக்கப்படாத பகுதிகளுக்கு மக்கள் ஏராளமாக வந்ததாலும் காலரா அதிகரித்ததற்கு உடனடியான காரணமாயிருந்தது. மற்றும் கூலிவேலையாட்கள் பலர் அண்டை மாவட்டங்களிலிருந்து இந்த மாவட்டங்களில் டெல்டாப் பகுதிகளுக்கு வளமிக்க வேலை தேடி வந்தனர். இவர்கள் வயல்களுக்குக் கொண்டு வரும் உணவைச் சாப்பிட்டுவிட்டு போகும் வழியில் கிடைக்கும் எந்தத் தண்ணீரையும் குடித்தார்கள். இந்த மாவட்டங்களின் சில பகுதிகளில் பாசன ஏரிகளின் வரவுகால்கள் தான் காலரா

23rd March 1964]

விரைவில் பரவுவதற்கு முக்கிய காரணமாக இருந்தன. இப் பகுதிகளில் குடி தண்ணீர் சப்ளை பாதுகாப்பான கிணறுகளிலிருந்து செய்யப்பட்டாலும், மக்கள் பெரும்பாலும் இந்த வரவுகால்களின் தண்ணீரையே பயன்படுத்தினார்கள். இவற்றுடன் பருவநிலைமைகளும் மோசமாயிருந்தன. 1963 நவம்பர் கடைசி வாரத்திலும் டிசம்பர் முதல் வாரத்திலும் அடைமழை பெய்தது. இந்த மாவட்டங்களில் காலரா அதிகரித்ததற்கு இவையெல்லாம் காரணமாயிருந்தன.

(இ) காலரா நோய் கண்டவர்களும் இறந்தவர்களும் :

	1963 நவம்பர்.		1963 டிசம்பர்.		1963 மொத்தம்.	
	பாதிக்கப்பட்டவர்கள்.	இறந்தவர்கள்.	பாதிக்கப்பட்டவர்கள்.	இறந்தவர்கள்.	பாதிக்கப்பட்டவர்கள்.	இறந்தவர்கள்.
(1)	(2)	(3)	(4)	(5)	(6)	(7)
திருச்சிராப்பள்ளி மாவட்டம்.	412	170	421	218	1,795	790
தஞ்சாவூர் மாவட்டம்	451	225	808	378	2,937	1,357

(உ) எடுத்துக்கொண்ட தடுப்பு நடவடிக்கைகளின் விவரம் :

அந்தந்த மாவட்டச் சுகாதார அதிகாரிகள் பின்வரும் நோய்த் தடுப்பு ஏற்பாடுகளையும் நோய்க்கட்டுப்பாடு ஏற்பாடுகளையும் மேற்கொண்டனர் :—

(1) காலரா பகுதிகளிலும் அவைகளைச் சுற்றியுள்ள பகுதிகளிலும் மக்கள் அனைவருக்கும் காலரா ஊசி போடப்பட்டது.

(2) காலரா கண்ட வீடுகள், பொருள்கள், உடைகள் முதலியவற்றில் முழுவதும் முறையாகவும் கிருமிக்கொல்லி மருந்துகளைத் தெளித்தல்.

(3) குடி நீர் ஆதாரங்கள் அனைத்திலும் முறையாகவும் ஒழுங்காகவும் குளோரின் மருந்து தெளித்தல்.

(4) காலரா, கண்டவர்களை உடனே அப்புறப்படுத்திப் பக்கத்திலுள்ள மருத்துவ மனைகள் அல்லது தொத்துநோய் மருத்துவக் கொட்டகைகளுக்குக் கொண்டு சென்று அவர்களைத் தனியே வைத்துச் சிகிச்சை செய்தல், மருத்துவ மனையில் முறையாகச் சிகிச்சை அளித்தல்.

பஞ்சாயத்து யூனியன்களால் நியமிக்கப்பட்ட மருத்துவப் பணியாளர்களுடன் தொத்து நோய் ரிசர்வ் பிரிவிலிருந்து

[23rd March 1964

51 ரிசர்வ் சுகாதார இன்ஸ்பெக்டர்கள் இந்த மாவட்டங்களுக்கு அனுப்பப்பட்டனர். மாவட்டச் சுகாதார அதிகாரிகளும் அவர்களது தனி உதவியாளர்களும் காலரா கண்ட பகுதிகளுக்கு இடைவிடாமல் சென்று, அங்கங்கே எடுத்துள்ள காலரா தடுப்பு-கட்டுப்பாடு ஏற்பாடுகளைப் பார்வையிட்டனர்; பொதுச் சுகாதார உதவி டைரக்டர்கள் பல முறை இந்த இரண்டு மாவட்டங்களையும் சுற்றிப் பார்த்தனர். எடுத்த நடவடிக்கைகளைப் பார்வையிட்டனர். பொதுச் சுகாதாரப் பணியாளர்களுக்கு சந்தர்ப்பத்துக்கேற்ப அந்தந்த இடங்களிலேயே உத்தரவுகள் பிறப்பித்தனர்.

தஞ்சாவூர் மாவட்டத்தில் காலராவினால் பாதிக்கப்பட்டோர் தொகை அதிகமாக இருந்த காரணத்தினால், தடுப்பு நடவடிக்கையில் மாவட்டச் சுகாதார அதிகாரிக்கு உதவியாகப் பொதுச் சுகாதார டைரக்டர் அலுவலகத்திலிருந்து சுகாதார அதிகாரி ஒருவர் அனுப்பப்பட்டார். மற்றொரு சுகாதார அதிகாரி (ரீஜனல் மலேரியாலஜிஸ்ட்), மதுரை மாவட்டச் சுகாதார அதிகாரியின் தனி உதவியாளர், தலைமையிடத்திலிருந்து செலக்ஷன் கிரேடு சுகாதார இன்ஸ்பெக்டர் ஒருவர் ஆகிய இவர்களும் மாவட்டச் சுகாதார அதிகாரிக்கு கண்காணிப்பு வேலையில் உதவியாயிருக்கும்படி நியமிக்கப்பட்டனர். மேற்சொன்ன மாவட்டம், காலரா டிவிஷன்களாக சௌகரியமாய்ப் பிரிக்கப்பட்டு ஒவ்வொரு காலரா டிவிஷனும் ஒரு கண்காணிப்பு அதிகாரியின் பொறுப்பில் விடப்பட்டது. இதனால் அவசியமான இடங்களில் தீவிரக் கண்காணிப்பை மேற்கொள்ளவும் உடனடி நடவடிக்கை எடுக்கவும் வசதி ஏற்பட்டது. மருத்துவப் பணியாளர்கள் விரைந்து செல்லவும் மருந்துகளை விரைந்து கொண்டு செல்லவும் காலரா கண்டவர்களை எடுத்துவந்து தனிமைப்படுத்திச் சிகிச்சை செய்யவும், வசதியாக தொத்துநோய்த் தடுப்பு மோட்டார் வண்டி ஒன்றும் இரண்டு ஜீப் கார்களும் இந்த மாவட்டத்தில் வைக்கப்பட்டிருந்தன. காலராவினால் பாதிக்கப்பட்ட பகுதிகளிலும் சுற்றிலுமுள்ள பகுதிகளிலும் தஞ்சாவூர் மாவட்டத்தில் 859,963 பேருக்குக் காலரா தடுப்பு ஊசிகள் போடப்பட்டன. இம் மாவட்டத்தில் காலராவினால் பாதிக்கப்பட்டோர் எண்ணிக்கை பெரிதும் குறைந்து வருகிறது. இதே போன்று, திருச்சிராப்பள்ளி மாவட்டத்திற்கும் பொதுச் சுகாதார டைரக்டர் அலுவலகத்திலிருந்து செலக்ஷன் கிரேடு சுகாதார அதிகாரி ஒருவரும் 14 ரிசர்வ் சுகாதார இன்ஸ்பெக்டர்களும் அனுப்பப்பட்டுள்ளனர். மாவட்ட சுகாதார அதிகாரிக்கும் அவரது தனி உதவியாளருக்கும் தடுப்பு நடவடிக்கையில் இவர்கள் உதவி புரிவர். இந்த மாவட்டத்திலும் பொதுச் சுகாதார டைரக்டர் அலுவலகத்திலுள்ள தொத்து நோய்த் தடுப்பு யூனிட் மோட்டார் வண்டி ஒன்று போக்குவரத்து வசதிக்காக அனுப்பப்பட்டது. இந்த மாவட்டத்தில் 381,922 பேருக்குக் காலரா தடுப்பு ஊசி போடப்பட்டது.